ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය / All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(II)

காலம் 03 மணித்தியாலங்கள்

**முகாமைத்துவம் மற்றும் அமைப்பு - 20**

විභාග අංකය
Index No / சுட்டெண்
..............................

- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

---

1. “வூகா (VUCA) எனும் சுருக்கப் பெயர்கொண்டு அழைக்கப்படும் நிலையின்மை, நிச்சயமின்மை, சிக்கலான மற்றும் தெளிவின்மை எனும் நான்கு வகை நிலமைகள் தற்போது முகாமைத்துவத் துறையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபருக்கும் முகம்கொடுக்க நேரிடுகின்ற அதே வேளை வெற்றிகொள்ள வேண்டிய ஒரு நிலையாகும்” (20 புள்ளிகள்)

   தாங்கள் பணியாற்றும் நிறுவனத்திற்குரிய வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பின்னர் திட்டமிடல் மற்றும் வரவுசெலவுக் கட்டுப்பாடு தொடர்பில் மேலுள்ள மேற்கோள் ஏற்புடையதாகும் விதத்தை விபரிக்க.

2. “அலுவலகமொன்றில், விசேடமாக அரசாங்க அலுவலகமொன்றில் தனிப்பட்டவர்களுக்கிடையிலான தொடர்புகளை (Inter personal relations) சிறந்த முறையில் பேணிவருவதற்கு தன்னுணர்ச்சி ஞானத்தின் அம்சங்களில் ஒன்றான உளமறிந்து செயற்படுமாற்றல் மிக முக்கியம் எனினும் புரிந்துணர்வுடன் மற்றும் சுயமான கண்காணிப்பின்றி உளமறிந்து செயற்படும் ஆற்றல் தோற்றம் பெறாது”

   நடைமுறை உதாரணங்களுடன் மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்கான தங்களது கருத்தை விளக்குக. (20 புள்ளிகள்)

3. i. கொரோன பெருந்தொற்று நிலமையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு அரசாங்க நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்பாடலின் போது பயன்படுத்தப்பட்ட வழிமுறைகள் எந்தளவு தூரத்திற்கு பயனுள்ளதாக இருந்ததென்பதை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

   ii. அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆளொருவரது மனதை தயார்படுத்துவதில் தாக்கம் செலுத்தும் பௌதீகக் கட்டுப்பாடுகள் (Physical Barriers), கால வரையறைகள் (Temporal Barriers), மற்றும் மானசீக கட்டுப்பாடுகள் (Psychological Barriers) எனும் பிரதான மூன்று வரையறைகளும் வீட்டிலிருந்து பணியாற்றும் உத்தியோகத்தரொருவரின் செயலாற்றுகையில் எவ்வாறு தாக்கம் செலுத்துமென்பதை விபரிக்க. (10 புள்ளிகள்)

4. “21 ஆம் நூற்றாண்டின் தலைவர்கள் வேகமான, நிலையற்ற மற்றும் அடிக்கடி ஆட்டங்காணக்கூடிய உலகத்தில் வாழ்வதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு தயாராகின்றனர். அவர்கள் தமது தொழில் வாழ்க்கையில் சுபீட்சத்தை அடையும் பொருட்டும் சமூகத் தலைவர்களாக திகழ்வதற்கு உத்தேசிக்கும் போதும் பொதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறுபட்ட ஆட்களை – வரையறைகளிலிருந்து – ஒன்றாக இணைப்பதற்கு அவர்களுக்கு ஆற்றலும் திறன்களும் அவசியமாகும்.”

இலங்கையின் அரசாங்கத் துறையில் இவ்வாறான நிலமைக்கு எவ்வாறு தயாராதல் வேண்டுமென்பதை விளக்குக. (20 புள்ளிகள்)

5. “வேகமாக மாறிவரும் சமூக நிலமைகளுக்கு முன்னால் முகாமைத்துவத்தின் மிகவும் சவால்மிக்க நிலமையாக இருப்பது யாதெனில், ஆளுக்குரிய செயலாற்றுகை தொடர்பில் கடுமையான தீர்மானங்களை எடுப்பதும் உயர் அறிவாற்றல்மிக்க ஆட்களை (Knowledge Workers) அரசாங்கத் துறையில் தக்க வைத்துக் கொள்வதுமாகும்” தங்களது கருத்தைக் கூறுக. (20 புள்ளிகள்)

************